**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**

கடந்த கால மக்கள் விரோத அரசியல் சூழலை மாற்றி அமைக்க

# மனிதனின் அடிப்படை உரிமைக்கான சிந்தனைக்கு...



*சமூக அரசியல் கல்விச்சுற்று இல. 02*

புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் சமூக அரசியல் கல்விச்சுற்று இல. 01இல், தோழர் மாவோ எழுதிய "கட்சியில் நிலவக்கூடிய தவறான கருத்துகளைத் திருத்துவது பற்றி" என்ற அவரது அனுபவக் கட்டுரையிலிருந்து "மனிதர்களின் வர்க்க நிலைப்பாடுகள் பற்றி" என்ற பகுதியினை விரிவாகப் பார்த்தோம். தற்போது கல்விச்சுற்று இல. 02இனை தொடருவோம்.

இவற்றில் தங்களுக்கு ஏற்படும் கேள்விகளை அல்லது கருத்துக்களை எமக்கு அறியத் தருவீர்களென நாம் எதிர்பார்க்கின்றோம்.தொடர்புகளிற்கு: ndp.front@mail.com

இலங்கை மக்களின் புதிய ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுத்து, வழி காட்டும்; தத்துவமாக மார்க்சிச - லெனினிய - மாவோயிச சிந்தனை உள்ளது. கடந்தகால அரசியல் அனுபவங்களையும், நாம் வாழ்ந்த - வாழுகின்ற சமூகத்தைப் புரிந்துகொள்ளவும், அதை மாற்றி அமைப்பதற்குமான வழிகாட்டும் தத்துவமாக, இத்தத்துவ சிந்தனைகளே, தெழிந்த ஆதாரங்களுடன் எம்முன்னுள்ளது.

மார்க்ஸ் - ஏங்கல்ஸ் வாழ்ந்த 19ம் நூற்றாண்டின் ஆரம்பகால உலக சூழ்நிலையில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, கலாச்சார கூட்டு அமைப்புகள் யாவும், நிலப் பிரபுத்துவத்தின் அதியுச்சக் கொடுங்கோல் ஆட்சியின் சூழலிலும், முதலாளிகள் தமக்கிடையில், போட்டி முதலாளித்துவ முன்னேற்றத்தில் மட்டுமே குறிக்கோளாக இருந்தபோது, அவர்களிடம் வளர்ந்து கொண்டிருந்த போட்டி முதலாளி இயக்கத்தின் விதிகளை ஆய்வு செய்து, மார்க்சியத்தை உருவாக்கினர். மனிதகுல வரலாறு ஏடறிந்த காலம் முதல், வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே இருந்து வந்திருப்பதை சுட்டிக்காட்டி, முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும், சோசலிசம் - கம்யூனிசத்தின் வெற்றியும், வரலாற்றில் தவிர்க்க முடியாதவை என்று மறுப்பதற்கு இடமின்றி, அறிவியல் மூலமான தர்க்க ஆதாரத்துடன், விஞ்ஞான கம்யூனிசக் கொள்கையை நிறுவினர்.

முதலாளியம் தனது போட்டி முதலாளியக் கட்டத்திலிருந்து, ஏகாதிபத்தியமாக வளர்ந்தபோது, அதன் வரலாற்று விதிகளை, மார்க்சியப் பார்வையிலிருந்து ஆய்வு செய்தார் லெனின். இந்தவகை ஏகாதிபத்தியம், சவக்குழியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் முதலாளித்துவம் எனவும், மரணப்படுக்கையில் இருக்கும் முதலாளித்துவம் என்றும் அவர் விளக்கியதுடன், பாட்டாளி வர்க்கப் புரட்சி தனது சகாப்தத்தை அடைந்து விட்டதாக உரைத்தார். உலகின் முதலாவது சோசலிசப் புரட்சிக்கு தலைமை தாங்கி, ரசியப் புரட்சியை 1917 ஒக்டோபரில் சாதித்தார். பாட்டாளி வர்க்கத்திலான சர்வாதிகார அரசை நிறுவினார். ஜார் மன்னனின் ஆட்சியில் ரசிய தேசிய இனத்தினால், மற்றைய இனங்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை - பிரிந்து போகும் உரிமையை உறுதி செய்து, பல்வேறு தேசிய இனங்களின் குடியரசுகள் ஒன்றுபட்ட ஒன்றியத்தை, சோசலிசத்தின் நடைமுறையில் அமுலாக்கிக் காட்டினார். மார்க்சியத்தை லெனினிய கட்டத்துக்கு வளர்த்தெடுத்தார். ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான சகாப்தத்தின் மார்க்சியமே லெனினியம், என்ற மார்க்சியப் பாதையில் நின்று, லெனினுடன் தோளோடுதோள் கொடுத்து, ரசியாவில் சோசலிச கட்டுமானப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்தார் ஸ்ராலின்.

ஸ்ராலினின் மறைவுக்குப் பின்பு, ரசியாவில் குருசேவ் தலைமையில் முதலாளித்துவ மீட்சி மறுபடியும் நடந்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்ற நாடுகளில், முதலாளித்துவ மீட்சி முயற்சிக்கப்பட்டுக் கொண்டிருந்த - நிறைவேறியிருந்த புதிய சங்கடத்தில் வாழ்ந்துகொண்டும், சீன மக்களின் புதிய ஜனநாயகப் புரட்சிகரப் போராட்டத்தின் வெற்றிக்கு தலைமைதாங்கி, சோசலிச நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டும் இருந்த தோழர் மாவோ, சோசலிச சமூகத்தின் வர்க்கப் போராட்டம் பற்றிய விதிகளை ஆய்வுசெய்தார். முதலாளிய மீட்சிக்கான வாய்ப்புகளை, அதன் பகையாளரை முறியடிக்கும் பொருட்டு, சீனத்தில் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சிக்கு தலைமை வகித்து நடத்தினார்.

சோசலிசம் என்பது முதலாளியத்திற்கும் - கம்யூனிசத்திற்கும் இடையிலான ஒரு காலகட்டம். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான காலகட்டம். ஓர் புரட்சிகர மாற்றத்திற்கான காலகட்டம் என மார்க்சும், மடிந்துவரும் முதலாளியத்திற்கும் - இளம்பருவத்தில் இருக்கும் கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்ட காலகட்டம் என லெனினும் எடுத்துக் கூறியுள்ளனர். சோசலிசம் பற்றிய கோட்பாட்டில், திரிபுவாதக் கருத்தை முன்வைத்து செயற்பட்ட குருசேவ் குழுவையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்குள் இருந்த, ஒத்த கருத்துப் போக்குகளிற்கான கூறுகளையும் எதிர்த்துப் போராடிய மாவோ, சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்களும் - வர்க்கப் போராட்டங்களும் என்ற இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்றும், எது வெல்லும், சோசலிசமா? - முதலாளித்துவமா? என்பது நீண்ட காலத்துக்கு தீர்மானிக்கப்பட முடியாதது என்றும், முதலாளித்துவம் மீட்டமைக்கப் படுவதற்கான அபாயம் நீடிக்கிறது எனக்கூறி, சோசலிச சமுதாயம் - கம்யூனிச சமுதாயமாக மாறுவதற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ், புரட்சியை தொடர்ந்து நடத்துவது பற்றியும், அரசியலை ஆணையில் வைப்பது பற்றியும், வர்க்கப் போராட்டத்தை பிரதான கண்ணியாகக் கொள்வது பற்றிய கோட்பாட்டை மாவோ வளர்த்தெடுத்தார். சோசலிசப் பார்வையில் வரும் முதலாளியத்தையும், சமூக ஏகாதிபத்தியத்தையும் உலக மக்களுக்கும் - நாடுகளுக்கும் மாவோ அடையாளம் காட்டினார். பாட்டாளி வர்க்கப் புரட்சி நிறைவேறி, முதலாளித்துவ மீட்பு நடந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில், மார்க்சியமாக மாவோ சிந்தனை வளர்ந்தது.

தோழர் மாவோவின் மறைவிற்குப்பின், சீனத்திலும் டெங் கும்பல் முதலாளித்துவ மீட்சியை முன்னேடுத்துள்ளது. ரசிய, சீன, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அண்மைக்கால நிகழ்ச்சிகளை - போராட்டங்களைக் கூட வரலாற்று ரீதியாக, இயங்கியல் பார்வையில் விளக்கும் (சமூக அரசியல் கண்ணோட்டத்தில்) ஒரே தத்துவம், மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனைதான்.

மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையானது, ஒன்றரை நூற்றாண்டுக்கு அதிகமாக, நடைபெற்று வந்துள்ள உலகப் புரட்சிகர போராட்டங்களில், புடம் போட்டு எடுக்கப்பட்டுள்ள தத்துவ ஆயுதமாகும். புரட்சிகர இயக்கத்தின் வெற்றிகளும் - தோல்விகளும் - சாதனைகளும் - படிப்பினைகளும் குவிந்துள்ள அனுபவச் செல்வத்தினால், அது வலிமையைக் கொண்டிருக்கின்றது. பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடாத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றி, உலகை மாற்றியமைக்கும் உன்னத முயற்சியில் ஈடுபட்டபோதெல்லாம், அது முன்னணியினரின் கரங்களில் வீற்றிருந்தது, இன்றும் மனிதகுல விடுதலையில் அக்கறைகொண்டு, இலங்கையிலுல் உள்ள உழைக்கும் மக்களின் விடுதலைக்காகவும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும், புதிய ஜனநாயகப் புரட்சிப் போரில் ஈடுபட்டிருக்கும் அனைவரின் கரங்களிலும், சிந்தனைகளிலும் இருக்கவேண்டிய வாழிகாட்டித் தத்துவ ஆயுதம் மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தாந்தங்களே ஆகும்.

கம்யூனிச சித்தாந்தம் மட்டுந்தான், மனிதகுல விடுதலைக்கான ஒரே ஒரு தத்துவம் என்பது வெறும் கனவோ, வெற்று நம்பிக்கையோ அல்ல. அதுதான் உண்மையான வரலாற்று இயக்கம். ஒரு புரட்சிகர பாரம்பரியத்துக்கான விதி. அனைத்து சுரண்டலாளர்களும் - ஒடுக்குமுறையாளர்களும் - அடக்குமுறையாளர்களும் - மதவாதிகளும், கம்யூனிசத்தை குறிவைத்துத் தாக்குவதன் முக்கிய காரணம் யாதெனில், அவர்களின் இருப்புக்கு நேரெதிரான தத்துவம் இது என்பதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்துவமான தத்துவம் இருக்கிறது. முதலாளிகளின் தத்துவத்தை வைத்துக்கொண்டு, தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தை எதிர்க்க முடியாது. தவறான தத்துவத்தை வைத்திருப்பது, உயிரில்லாத உடம்புக்குச் சமம். திருத்தல் வாதமும், பெருந்தேசிய - குறுந்தேசிய வாதமும், பாட்டாளி மக்களின் விடுதலைக்கான தத்துவம் அல்ல. மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனைகள், அனைத்து அடக்கு முறைகளுக்கும் - சுரண்டலுக்கும் - ஒடுக்கு முறைகளுக்கும் எதிரியாக நின்று, எமக்கு முக்கியத்துவம் தருகின்றது. முதலாளியத்தின் அட்டகாசத்தை முடிவுகட்டும் மகத்தான விஞ்ஞான கம்யூனிச முறைகளை, மனிதகுலம் கண்டிருக்கின்றது. சுரண்டற்கொள்கை, ஒடுக்குமுறை, வேலையின்மை, கல்வியின்மை, தேசிய இன ஒடுக்குமுறை, பெண்களை

இரண்டாம் பட்சமாக நடத்துவது போன்ற, இந்த சமூகத்தின் பல்வேறு சீர்கேடுகளை ஒழித்துக் கட்டுவதற்கான தத்துவத்தை இது உணர்வு பூர்வமாக கொண்டுள்ளது. இது நமது அமைப்பின் தத்துவ அடிப்படையாகும். இந்த தத்துவ வழியே, நமது நாட்டின் புரட்சிக்கும், எல்லா நாடுகளின் புரட்சிக்கும் அடிப்படை வழிகாட்டுதலை வழங்குகின்றது. ஆகவே தான், இது நமது தத்துவ அடிப்படையாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களும், அனைத்தும் தழுவிய உரிமையை ஏற்றும், நாட்டின் கள நிலமைகளுடன் ஒன்றிணைப்பதன் மூலம், புரட்சிகரமான தத்துவத்தையும் - நடைமுறையையும் - கூர்மையான அரசியல் வழியையும் - வேலைத் திட்டத்தையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இலங்கையின் நிலைமைகளுடன் ஒன்றிணைந்து, போராட்டத்தை முன்னேடுப்பதன் மூலம், தத்துவத்தையும் - நடைமுறையையும் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். இலங்கை மக்களின் புரட்சிகரமான - இடைவிடாத நடைமுறை ஊடாக, நமது நாட்டில், இந்த தத்துவத்தினை நடைமுறையில் தொடர்ந்து வளர்த்தால் மட்டுமே, இதனைச் செழுமையடையச் செய்து வெற்றிகாண முடியும்.

## மார்க்சிஸ சிந்தனைகள் சிறந்ததோர் சமூக விஞ்ஞானம் என ஏற்க முடியுமா?

ஒரு பொருளின் பண்புகளை புறவாய அடிப்படையில் நின்று ஆராய்ந்து, அப்பொருளின் பண்புகள் பற்றியும் வளர்ச்சி பற்றியும் உள்ள புறவாய உண்மைகளை கண்டிறிந்து கூறுவது ~விஞ்ஞானம்| என்று அழைக்கப்படுகின்றது. எனவே தான் இயற்கையின் பண்புகளை, வளர்ச்சி பற்றிய புறவாய உண்மைகளைக் கூறுகின்ற பௌதீகம், இரசாயனம், உயிரியல் போன்றவை இயற்கை விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகின்றது. அதுபோல் சமுதாயத்தின் பண்புகளான வளர்ச்சி பற்றிய புறவாய உண்மைகளை, புறவாய அடிப்படையில் நின்று ஆராய்ந்து கூறுவது, சமூக விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகின்றது. மனித சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய புறவாய உண்மைகளை முதன் முதலில் விஞ்ஞான பூர்வமாக, தெளிவாக வரையறுத்துக் கூறுவது ~மார்க்சியம்| மட்டுமே ஆகும். எனவே தான் மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானம் என அழைக்கப்படுகின்றதில் எள்ளளவும் ஐயமில்லை.

## விஞ்ஞானத்தின் ஆற்றல் இயங்கியல் அடிப்படையில் நெகிழ்வுத் தன்மை கொண்டதா?

இயற்கையுடன் மனிதன் போராடப் போராட, இயற்கை பற்றிய மனிதனின் அறிவும் வளர்கிறது. இயற்கை பற்றிய புதுப்புது உண்மைகளை மனிதன் நாளாந்தம் கண்டறிகின்றான். அதாவது இயற்கை பற்றிய விஞ்ஞானம் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இயற்கையும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றது என்பது விஞ்ஞான - அறிவியல்பூர்வ உண்மையாகும். எனவே இயற்கையில் மாற்றங்கள் ஏற்படும்போது, இயற்கை பற்றிய விஞ்ஞான ஆற்றலில் பல மாற்றமும், நெகிழ்ச்சியும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இயற்கையின் மாற்றத்தை ஏற்றுக் கொள்கிற ஒவ்வொருவரும், இயற்கை விஞ்ஞானத்துக்கான வளர்ச்சியின் அவசியத்தை உணரவேண்டியது அவசியமாகும்.

அதேபோலத்தான் மனிதன் தனது சமுதாய அடிப்படையில், போராடப் போராட சமுதாயம் பற்றிய மனித அறிவும் வளர்கிறது. சமுதாயம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றது என்பது புறவாய உண்மை. எனவே சமுதாயம் பற்றிய சமூக விஞ்ஞானம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை. சமுதாயத்தின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்கிற ஒவ்வொருவரும், சமூக விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கான அவசியத்தை உணர்வது மிகமிக அவசியமாகும்.

மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானம் என்பதால், அது மாற்றத்திற்கும் - வளர்ச்சிக்கும் உட்பட்டதேயாகும். மார்க்சியத்தின் வளர்ச்சியை மறுக்கின்ற எவரும், மார்க்சிய வாதியாக, இயங்கியல் பொருள்முதல் வாதியாக இருக்க முடியாது. இவ்வாறானவர்கள் இயக்க மறுப்பில் கருத்து முதல்வாதியாகவே இருக்க முடியும்.

## மார்க்சியத்தின் அடிப்படை மூலக்கூறு எங்கிருந்து கண்டறியப்பட்டது?

மார்க்சியத்தை வளர்த்தெடுத்த கார்ல் மார்க்சும் - ஏங்கல்சும் தங்களது ஆய்வின் விளைவாக, மனித சமுதாயத்தின் பொதுப்பண்புகளை கண்டுபிடித்தனர். இன்று வரையுள்ள மனித சமுதாயத்தின் வரலாறு எல்லாம் (புராதன பொதுவுடமை சமூகத்தை தவிர) வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே இருந்து வருகின்றது, என்பதை அவர்கள் ஆராய்ந்து அறிந்ததுடன், அதை நிறுவினர். வர்க்கப்போராட்டம் ஒன்றே மனித சமுதாயத்தின் உந்து சக்தியாகவும், வர்க்கப் போராட்டத்தின் மூலமே, மனித சமுதாயத்தை சுபீட்சமான நிலைக்கு கொண்டுவர முடியுமென்று அவர்கள் கண்டறிந்தனர்.

மனித சமுதாயத்தின் பொதுவளர்ச்சி முறைகளை ஆராய்ந்த மார்க்சும் - ஏங்கல்சும், சமுதாயம் தனது வளர்ச்சிப் போக்கில் பல நிலைகளைக் கடந்து வந்துள்ளது என்றும் குறிப்பிட்னர். மனிதகுலத்தின் பல்வேறு வளர்ச்சி நிலையைக் கண்டறிந்த மார்க்சும், ஏங்கல்சும் எவ்வாறு மனிதகுலம் ஒரு வர்க்க நிலையில் இருந்து அடுத்த வர்க்க நிலைக்கு செல்கின்றது என்பதையும் ஆராய்ந்து கூறினர்.

மனிதகுலத்தின் பொதுவளர்ச்சி நிலைகளை ஆராய்ந்து அறிந்த மார்க்சும் - ஏங்கல்சும், தாங்கள் வாழ்ந்த முதலாளித்துவ சமூக அமைப்பை, மிகத் தெளிவாக ஆராய்ந்தனர். அந்த ஆய்வின் பயனாக, எவ்வாறு முதலாளித்துவ சமூகம் முரண்பாட்டில் சிக்கியுள்ளது என்பதையும், அம்முரண்பாடு எவ்வாறு முதலாளித்துவ சமுதாயத்தை அழிப்பதற்கும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையிலான சோசலிசத்திற்கும், இறுதியில் கம்யூனிசத்திற்கும் இட்டுச் செல்லும் என்பதை ஆதாரங்கள் - தரவுகள் மூலம் கண்டுபிடித்தனர்.

மார்க்சியத்தின் நோக்கமானது குறுகிய எல்லைகளைக் கடந்து விரிவாக்குவதுடன் மட்டுமல்லாது, அதை மாற்றி அமைப்பதுமாகும். மனித குலத்தின் பொதுவளர்ச்சி விதிகளையும், முதலாளித்துவத்தின் குறிப்பான வளர்ச்சி விதிகளையும் ஆராய்ந்த மார்க்சும் - ஏங்கல்சும், எவ்வாறு மனிதன் இந்த முதலாளித்துவ சமூகக் கட்டுமானத்தை தகர்த்தெறிந்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஊடாக, கம்யூனிச சமுதாயக் கட்டுமானத்தை வளர்த்தெடுப்பது பற்றியும் ஆராய்ந்தனர்.

இவ்வாறு மார்க்சியமானது மனிதகுலத்தின் பொதுவளர்ச்சி விதிகளையும், முதலாளியத்;தின் குறிப்பான வளர்ச்சி விதிகளையும், சோசலிச - கம்யூனிச சமுதாயங்களின் பண்புகள் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளது.

## லெனின் தனது அரசியலரங்கில் பாட்டாளி வர்க்கத்துக்காக எதனை வளர்த்தெடுத்தார்?

மார்க்சியத்தை பெற்றெடுத்த மார்க்சும் - ஏங்கல்சும் வாழ்ந்த காலம், முதலாளியத்துவ காலகட்டமே ஆகும். இவ் முதலாளித்துவம் 19ம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஏகபோக முதலாளியத்துவமாக வளர்ச்சி அடைந்தது. இக்காலத்தில் தான் லெனின் அரசியல் அரங்கில் கால் பதிக்கின்றார். முதலாளியத்தின் வளர்ச்சியில் ஏகபோகக் கூறுகள் தோன்றும் என்பதை மார்க்சும் - ஏங்கல்சும் அறிந்திருந்த போதிலும், அவர்களால் முதலாளியத்துவம் ஏகபோக முதலாளியத்துவமாக வளரும் என்பது பற்றியும், ஏகபோக முதலாளியத்தின் பண்புகள்பற்றியும், முன்கூட்டியே கூற முடியவில்லை. கூறவும் இயலாது.

முதலாளியத்தின் புதிய பண்புகளால் ஏற்பட்டுவரும் மாற்றம் பற்றியும், வளர்ச்சி பற்றியும் (ஏகாதிபத்தியம் பற்றி) ஆராய்ந்து அறியும் கடமை, பொறுப்பு லெனினிற்கு ஏற்பட்டது. அவர் ஏகாதிபத்தியத்தின் பண்புகள் பற்றி தெளிவாக ஆராய்தார். மேலும் அவர் ஏகாதிபத்திய காலகட்டத்தில், பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் பற்றி ஆராய்ந்து தெளிவு

படுத்தினார். மார்ச்சியத்தை தனது வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட லெனின், அம்மார்க்சியத்தை ஏகாதிபத்திய காலகட்டத்திலேயே, அதை அடுத்த கட்ட உயர் நிலைக்கு வளர்த்தெடுத்தார். அதன் பயனாக மார்க்சியம் தனது அடுத்த கட்ட நிலையான லெனினியத்தை வந்தடைந்தது.

## லெனினியத்தின் புதிய உண்மைகள் யாவை:

முதலாளியத்துவம் தனது வளர்ச்சிப் போக்கில், தவிர்க்க இயலாதவாறு ஏகபோக முதலாளியத்துவமாக - ஏகாதிபத்தியமாக மாறும் என்பதை லெனின் கண்டறிந்ததுடன், ஏகாதிபத்தியத்தின் பண்புகளையும் தெளிவாக ஆராய்ந்து கூறினார். உலகத்திலே ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியானது, சமச்சீரற்ற வளர்ச்சியாக இருக்கும் என்றும் கூறினார். ஏகாதிபத்தியங்கள் நாடுகளைக் கைப்பற்றும் போட்டியில் செயற்படுவது, அவற்றின் தவிர்க்க இயலாத பண்பு எனவும் குறிப்பிட்டார். ஏகாதிபத்திய வளர்ச்சியானது, தனக்கேயான பண்புடன் சமச்சீரற்ற வளர்ச்சிப் போக்கில் செல்கின்றது என்றதுடன், அதற்கான பண்புகளில் ஒன்றான, நாடுகளை கைப்பற்றும் போக்கில் இறங்கும் போது, உலயுத்தமும் தவிர்க்க முடியாதது என்றார். உலக யுத்தங்களின் ஊற்றே ஏகாதிபத்தியங்கள் தான் எனவும் நிறுவினார். ஏகாதிபத்தியங்கள் உலகில் இருக்கும் வரை, யுத்தங்களைத் தவிர்க்க முடியாதென்றும் கூறினார். எனவே உலக அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால், ஏகாதியத்தியங்கள் தூக்கி எறியப்பட வேண்டும். அதற்காக அனைத்து நாட்டு தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட நாட்டு மக்களும் ஒன்றுபடுங்கள் என்ற கோஷத்தை முன்வைத்தார்.

ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில், சோசலிசத்தை தோற்றுவிக்க முடியுமென்று கூறியதுடன், அதை செயல் வடிவிலும் செய்து நிரூபித்தார். உலகில் முதன் முதலாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மையமாகக் கொண்ட சோசலிச அரசை ரசியாவில் நிறுவினார் லெனின். அதன் பின்னர் உலகில் பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலான சோசலிச அரசுகள் உருவாகின. இன்னும் பல நாடுகளில் அதற்கான போராட்டங்களும் நடக்கின்றன. இதன் மூலம் லெனின் தத்துவங்களால், ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் சோசலிசப் புரட்சி சாத்தியமாகும் என்பது நிருபணமாயிற்று.

அவரது தலைமையில் நடைபெற்ற ரசியப் புரட்சியின்போது, ஒவ்வொரு கால கட்டங்களையும் சமூக மாற்றத்திற்கு ஏற்ப பகுத்து, மார்க்சியத்தை அவ்வப்போது தோன்றும் முரண்பாடுகளுடன் இணைத்து செயலாற்றினார். ரசியப் புரட்சி இரு கட்டங்களை உள்ளடக்கியது என்றும், முதலில் நிலவுடமை அமைப்பை தூக்கி எறிவது அவசியம் என்றும், அதன் பின்னர் தான், சோசலிசத்தை நோக்கிச் செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டார். முதல் கட்டத்தை பூர்சுவா ஜனநாயகப் புரட்சி| என்றும், இரண்டாவது கட்டத்தை சோசலிப் புரட்சி| என்றும் அழைத்தார். பூர்சுவா ஜனநாயப் புரட்சியின் நோக்கம், நிலவுடமை சமூக முறையை முழுமையாக தகர்த்தெறிவதே ஆகும் என்றும், சோசலிசப் புரட்சியின் நோக்கம் முதலாளித்துவத்தின் சுரண்டலை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் ஒழிப்பதுடன், அனைத்து சுரண்டலையும் ஒழிப்பது என்றும் சுறினார்.

மேலும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் நிகழ்கின்ற குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயப் புரட்சிக்கும், முதலாளித்துவ காலகட்டத்தில் நிகழ்ந்த குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரடசிக்கும் இடையில், வேறுபாடு இருக்கின்றது என்று லெனின் ஆராய்தறிந்து கூறினார். முதலாளித்துவ காலகட்டத்தில் நிகழ்ந்த குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்கியது முதலாளித்துவமே. ஆனால் ஏகாதிபத்தியச் சூழலில் பாட்டாளி வர்க்கம் வளர்ந்துள்ள நிலையில், குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சிக்கு முதலாளியத்தால் தலைமை அளிக்க முடியாது என்றும், பாட்டாளி வர்க்கமே தலைமை கொடுக்க முடியும் என்றும் விளக்கினார். பாட்டாளி வர்க்கத்தால் தலைமை கொடுக்கின்ற, குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சியில், விவசாயிகள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். முதலாளித்துவ வர்க்கமும் இப்புரட்சியில் பங்கு கொள்ளும். ஆனால்

முதலாளித்துவ வர்க்கத்தால் தலைமை கொடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். பாட்டாளி வர்க்க தலைமையிலான புதிய குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சி, பழைய வகை உலகப் புரட்சியின் பகுதியல்ல என்றும், அது உலக பாட்டாளி வர்க்க புரட்சியின் ஒரு அங்கமாகும் என்றும் லெனின் குறிப்பிட்டார். புதிய குட்டி முதலாளியத்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சியின் இறுதியில் அமைக்கப்படும் புரட்சிகர மக்கள் அரசாங்கத்தில், பாட்டாளி வர்க்க கட்சி பங்கெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மேலும் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கம், குட்டி முதலாளித்துவ பூர்சுவா ஜனநாயகப் புரட்சியுடன் நின்று விடுவதில்லை. மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகார சோசலிசத்தை நோக்கி, புரட்சியை இட்டுச் செல்லவேண்டும் என்றும் கூறியவேளை, அதை நடைமுறையில் நிகழ்த்தியும், நிரூபித்தும் காட்டினார் லெனின்.

முதன் முதலாக உலகம் ஏகாதிபத்தியத்தையும், பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் உள்ளடக்கிய சகாப்தத்தை தற்போது அடைந்துள்ளது என்பதை லெனின் தான் சுட்டிக் காட்டினார். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட நாடுகளின் போராட்டம், சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கம் என்றும் வரையறுத்தார். ரசிய அக்டோபர் புரட்சிக்குப் பின்பும், முதலாம் உலக யுத்தத்திற்குப் பின்பும், உலக அரசியல் சக்திகளை அவர் மூன்று வகைப்படுத்தினார். காலனி நாடுகளையும் - உலக யுத்தத்தால் காலனி நாடுகளின் நிலைக்கு தள்ளப்பட்ட நாடுகளையும் - சோவியத் ரசியாவையும் ஒரு பிரிவாகவும், தாம் கொண்ட பழைய அரசியலைக் காப்பாற்றிக் கொண்டு, அதே சமயத்தில் அமெரிக்காவையும் சார்ந்து நின்ற நாடுகளை மற்றொரு பிரிவாகவும், அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா போன்ற நாடுகளை மற்றொரு பிரிவாகவும் வகுத்தார். இதன் அடிப்படையிலேயே, உலகப் போராட்டத்தில் வர்க்கத்தின் கடமைகளை ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை, எவ்வாறு நடத்தி நிறைவேற்றுவது என்பதை வரையறுத்தார்.

## மார்க்சியத்தையும் - லெனினியத்தையும் அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனித்துவ நாடுகளுக்கு ஏற்ப மாவோ எதனை வளர்த்தெடுத்தார்?

மார்க்சியத்தையும் - லெனினியத்தையும் பாதுகாத்து வளர்க்கும் பணியை, மாவோ மேற்கொண்டார். அதேவேளை அதனை அடுத்தகட்ட நிலைக்கு நகர்த்தினார்.

## மாவோவின் புதிய ஜனநாயகப் புரட்சி எவற்றைச் சாதித்தது?

புரட்சியின் இரு கட்டங்களைப் பற்றிய லெனினின் கருத்துக்களை, மாவோ நன்குணர்ந்து அதனை ஒரு அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ நாடான சீனத்தில் பிரயோகித்தார். ஜனநாயகப் புரட்சி பற்றிய லெனினின் கருத்துக்களை, மேலும் வளர்த்தார். சீனப்புரட்சி இரண்டு கட்டங்களை உள்ளடக்கியது என்றும், அவை புதிய ஜனநாயகப் புரட்சியும் - சோசலிசப் புரட்சியும் என வரையறுத்தார். முதல் கட்டமாகிய புதிய ஜனநாயகப் புரட்சியின் நோக்கமானது, ஏகாதிபத்தியத்தையும் - நிலவுடமையையும் தூக்கி எறிவதாகும். அடுத்த கட்டமாகிய சோசலிசப் புரட்சியின் நோக்கம், முதலாளித்துவ சுரண்டலை ஒழித்துக் கட்டுவதாகும். ஏகாதிபத்தியம் சர்வதேச அரங்கில் பிரவேசித்துள்ள நிலையில், எந்த ஒரு நாட்டிலும் தேசிய முதலாளித்துவம், புதிய ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்க இயலாது என்றும், அது தானே சுயேட்சையாக ஒரு அரசை நிறுவ முடியாது என்றும், மாவோ தெளிவாகக் கூறினார். பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே, புதிய ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்க முடியும் என்றும் குறிப்பிட்டார். பாட்டாளி வர்க்கத்துக்கு உறுதுணையாக விவசாயிகளும், மத்திய தரவர்க்கமும், அறிவு ஜீவிகளும் இருப்பார்கள் என்றும், ஊசலாட்டம் உடையதாக முதலாளித்துவ வர்க்கம் நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஒரு அரை காலனித்துவ - அரை நிலப்பிரபுத்துவ நாட்டில், ஒரு முரண்பாட்டுக்குள் அடிப்படை முரண்பாடாக அவை நீடிக்கும் என்றும், அந்த நாட்டிற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான முரண்டபாடும் வளர்ச்சிபெறும் எனவும் கூறினார். இவை இரண்டில் ஒரு

முரண்பாடே, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், பிரதான முரண்பாடாக நீடிக்கும் எனவும் கூறினார். ஏகாதிபத்தியம் நேரடியாக ஆக்கிரமிப்புச் செயலை மேற்கொள்ளும் வரை, நிலப் பிரபுத்துவத்துக்கும் - பரந்து பட்ட மக்களுக்கும் இடையேயான முரண்பாடு தீர்க்கப்படாத முரண்பாடாகவே நீடிக்கும். ஏகாதிபத்தியம் நேரடியாக தாக்குதலில் ஈடுபட்ட உடனேயே, ஏகாதிபத்தியத்திற்கும் அந்த நாட்டு மக்களுக்கும் இடையேயான முரண்பாடு, பிரதான முரண்பாடாக மாறும். பல்வேறு ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியம், அந்த நாட்டை தனது காலனி நாடாக மாற்ற முயற்சிக்கும் நேரத்தில், பிற ஏகாதிபத்திய - தரகுமுதலாளித்துவ வாதிகளுக்கும் - நிலப்பிரபுக்களுக்கும் கூட, அந்த ஏகாதிபத்தியத்திற்கு ஏதிரான போரில் பங்கெடுக்க முன்வரலாம் என்பதும், அதை பாட்டாளிவர்க்க தலைமை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், மாவோ வலியுறுத்தினார். புதிய ஜனநாயகப் புரட்சியின் சாரம்சம் ஒரு விவசாயப் புரட்சி என்பதையும் வலியுறுத்தினார். புதிய ஜனநாயகப் புரட்சிப் பணியை நிறைவேற்றாமல், பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சிக்கு செல்லமுடியாது என்று அவர் கூறினார். புதிய ஜனநாயகப் புரட்சியின் இறுதியில், பாட்டாளிவர்க்க தலைமையிலான ஒரு ~மக்கள் சர்வாதிகாரம்| நிறுவப்படவேண்டும் என்றும், அதில் ஏகாதிபத்தியத்திற்கும் - நிலவுடமைக்கும் எதிரான எல்லாப் புரட்சிகர மக்களும் பங்கெடுக்கலாம் என்றும் அவர் தெளிவாக்கினார்.

மக்கள் யுத்தம் என்பதில், ஒரு முதலாளித்துவ நாட்டில் நிகழ்கின்ற புரட்சிக்கும் - ஒரு அரைக் காலனித்துவ - அரை நிலப்பிரபுத்துவ நாட்டில் நிகழ்கின்ற புரட்சிக்கும் இடையிலே வேறுபாடு உண்டு. ஒரு முதலாளித்துவ நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலம் வரை, சட்டப+ர்வமான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் புரட்சிக்கு தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு, இறுதியில் நாடு தழுவிய புரட்சியை மேற்கொள்ளும் என்று மாவோ கூறினார். முதலாளித்துவ நாட்டில் புரட்சியானது, முதலில் நகர்ப் புறங்களை கைப்பற்றி, பின்னர் கிராமப் புறங்களுக்கு விரிவுபடுத்தப்படுவதே அவசியம். ஆனால் ஒரு அரைக் காலனித்துவ - அரை நிலப்பிரபுத்துவ நாட்டின் புரட்சியின் தன்மை இதில் மாறுபட்டிருக்கும். இங்கு மக்களுக்கு ஒருவித ஜனநாயக உரிமையும் கிடைக்காது. எனவே பாட்டாளிவர்க்கம் ஒரு நீண்ட காலத்தைய, சட்டபூர்வமான போராட்டத்தில் தன்னைப் புரட்சிக்கு தாயார் செய்துகொள்வது என்பது இயலாதது. இங்கு புரட்சி என்பது, முதலில் கிராமப் புறங்களைக் கைப்பற்றிய பின்னர், நகர்ப் புறங்களை சுற்றி வளைப்பதாக அமையும். மேலும் ஒரு அரைக் காலனித்துவ - அரை நிலப்பிரபுத்துவ நாடாவது, தமது உற்பத்திச் சக்தியின் வளர்ச்சியில் சமச்சீரற்ற போக்கினைப் பெற்றிருக்கும். அதன் விளைவாக உற்பத்தி உறவுகளிலும் சமச்சீரற்ற வளர்ச்சி நிலை காணப்படும். அப்படிப்பட்ட நிலையில், ஒரு நாடு தழுவிய புரட்சி என்பது அங்கு சாத்தியமில்லை. மாறாக முதலில் "செந்தளங்களை" உருவாக்கி பின்பு அவற்றில் இருந்து விடுதலைப் பகுதிகளை விரிவுபடுத்தும் தன்மையுடைய புரட்சி அமையும் என்றும், அங்கு புரட்சிப் போரானது நீண்ட யுத்தமாக அமையும் என மாவோ குறிப்பிட்டார். "நாடுதழுவிய புரட்சி" என்ற கருத்தையும் "துரித வெற்றி" ஆசையையும் அவர் கடுமையாக விமர்சித்தார். புதிய ஜனநாயகப் புரட்சியின் பிரதான வடிவமாக ஆயுதம் தாங்கிய போராட்டமும், பிரதான ஸ்தாபனமாக படையும் அமையும் என்றும், மக்கள் யுத்தப் பாதையான கொரில்லா யுத்த போராட்டத்தைப் பற்றிய சிந்தனைகளையும் மாவோ வளர்த்தார்.

புதிய ஜனநாயகப் புரட்சியிலான வெற்றியின் இறுதியில், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில், மக்கள் சர்வாதிகார அரசு நிறுவப்பட்ட பின்பு, அம்மக்களின் சர்வாதிகாரம் எவ்வாறு புதிய ஜனநாயகப் புரட்சியின் பணிகளை நிறைவேற்றுவது என்பது பற்றி, மாவோ திட்டவட்டமான கொள்கைகளை வரையறுத்துள்ளார். நிலவுடமையை ஒழித்துக் கட்டும் பணியை வெற்றிகரமாக செய்து முடித்தார். அதன்பின்பு பாட்டாளி வர்க்கம் சோசலிசத்தை நோக்கிச் எவ்வாறு செல்லமுடியும் என்பதையும் தெளிவு படுத்தினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வெற்றிகரமாக நிறுவினார். சோசலிச புரட்சியை நிறைவேற்றும் அரசியல், பொருளாதார, கலாச்சார பணிகளை வரையறுத்து

செயற்படுத்தி வெற்றியும் கண்டார். இவ்வாறு முதன் முதலாக புதிய ஜனநாயகப் புரட்சியிலிருந்து, சோசலிசப் புரட்சியை நோக்கிச் செல்வதற்கான கொள்கைகளை மாவோ வகுத்தார்.

மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமே சோசலிசத்தின் அடிப்படையாகும் என்பதே மார்க்சிய லெனினியத்தின் கொள்கை ஆகும். முதலாளித்துவம் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டு, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பின்னரும், தோல்வியுற்ற முதலாளித்துவம், வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களுடனும் - உள்நாட்டுத் துரோகிகளுடனும் சேர்ந்து, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை தகர்க்க முயற்சி செய்யும். இம் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டால் தான், சோசலிச சமுதாயப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி, இறுதி இலட்சியமான கம்யூனிசத்தை அடையமுடியும். எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாப்பது முதற்கட்ட கடமையாகும். முதலாளித்துவ வர்க்கம் தூக்கி எறியப்பட்ட பின்பும் கூட, முதலாளித்துவத்தின் பிற்போக்குச் சிந்தனைகள், சமுதாயத்தில் நீடிக்கும். அவற்றை அடியோடு தகர்த்தெறிவதன் மூலமாக மட்டுமே, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க முடியும். எனவே அதற்காக மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சிக் கொள்கையை மாவோ உருவாக்கி, அதற்குத் தானே முன்னின்று அப்புரட்சியை நடத்தினார். பாட்டாளிவர்க்க கலாச்சாரப் புரட்சியானது, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஏற்பட்ட பின்னரும், அது தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார். மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப் புரட்சித் தத்துவமானது, மாவோவின் மாபெரும் படைப்பாகும்.

## எதிர்மறைகளின் ஒற்றுமை முரண்பாட்டு விதிகள் இயங்கியலின் அடிப்படை விதியாகுமா?

மார்க்ஸ் - ஏங்கல்ஸ் ஆகிய இருவரின் மறைவுக்குப் பின்னர், லெனின் இயங்கியல் பொருள் முதல்வாதத்தை பாதுகாத்து வளர்த்தார். அதற்கு எதிரான எதிரிகளின் வாதங்களை முறியடித்து, அதிலும் வெற்றிகண்டதுடன், இன்னும் தெளிவாக வளர்த்தெடுத்தார். லெனினைத் தொடர்ந்து மாவோவும் இயங்கியல் பொருள் முதல்வாதத்தை வளர்தெடுத்தார். எதிர் மறைகளின் ஒற்றுமை முரண்பாடு பற்றிய விதியே இயங்கியலின் அடிப்படை விதியாகும், என்பதை தெளிவுபடுத்தினார். முரண்பாடுகளை பிரித்தாராய்வது பற்றியும், பல்வேறு முரண்பாடுகளில் இருந்து, பிரதான முரண்பாட்டை பிரித்தறியும் வழிமுறையையும், ஒரு முரண்பாட்டுக்குள்ளேயே பிரதான அம்சத்தை பிரித்தறியும் முறைபற்றியும், தெளிவாக வரையறுத்தார். நடைமுறைக்கும் - தத்துவத்துக்கும் இடையில் உள்ள உறவுகளை தெளிவாக வரையறுத்து விளக்கினார். சரியான கருத்துகளும் - தத்துவங்களும் எங்கிருந்து பிறக்கின்றன என்பதை கண்டறிந்து விளக்கினார். இயங்கியல் பொருள்முதல் வாதத்தை, மாவோ உயர் நிலைக்கு வளர்த்துச் சென்றுள்ளார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

## மூலதனம் என்பது மார்க்சிய பொருளாதாரமாகுமா?

மார்க்சும் - ஏங்கல்சும் முதலாளித்தவப் பொருளாதாரம் பற்றி விரிவாக ஆராய்ந்து வரையறுத்தனர். அதேபோல் சோசலிச - கம்யூனிச சமூகங்களின் பொருளாதார பண்புகள் பற்றி ஆராய்ந்து வரையறுத்தனர். இவ்வாறு வரையறுத்ததனால் பிறந்ததே மூலதனம். இவர்களின் இவ் வரையறையை மையமாக வைத்து, லெனின் ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பை ஆய்வுக்கு உட்படுத்தி, அதன் அடிப்படையில் ரசியாவில் எவ்வாறு சோசலிச பொருளாதாரத்தை நிறுவது என்பது பற்றிய பிரச்சனைகளுக்கு விடையும் கண்டார். ஏகாதிபத்திய சமூகத்தில் இருக்கும் அமைப்பின் பொருளாதாரத்தை ஆராய்ந்த லெனின், சோசலிச பொருளாதாரத்தை அதன் மேல் எவ்வாறு பிரயோகிப்பது என்பது பற்றி விளக்கியதுடன், நடைமுறையில் செயற்படுத்தியும் காட்டினார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு, மாவோ அரை நிலப்பிரபுத்துவ - அரைக் காலனித்து நாட்டின் பொருளாதார அமைப்பை ஆராய்ந்ததுடன், அரைக்

காலனித்துவ - அரை நிலப்பிரபுத்துவ நாட்டில், எவ்வாறு நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தலைமையில், அதனை முதலாளித்துவ பொருளாதாரமாக வளர்த்தெடுத்து, அவ் முதலாளித்துவ - ஏகாதிபத்திய பொருளாதாரத்தை தூக்கி எறிவது பற்றியும், அதன்பின் சோசலிச பொருளாதாரத்தை எவ்வாறு கட்டியமைப்பது என்பது பற்றியும், மாவோ திட்டவட்டமான கொள்கைகளை வகுத்தார். கம்யூன் அமைப்பை உருவாக்கி, விவசாயத்திற்கும் - ஆலை உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கினார்.

மேற்படி விளக்கத்தினூடு, மார்க்சிய லெனினிய மாவோ சித்தாந்தங்களை, எமது அமைப்பின் வழிகாட்டும் தத்துவமாக நியமித்ததற்கான அடிப்படை நோக்கத்தை நாம் விளக்கமாகக் கூறியுள்ளோம். ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட வேண்டுமென்றால், அதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவது, பாட்டாளி வர்க்க சிந்தனைகளை தமது சித்தாந்தங்களாகக் கொண்டவர்களின் கடமையாகும். இலங்கை போன்ற நாட்டில், பாட்டாளி வர்க்கப் புரட்சியை மேற்கொள்வதற்கு, இலங்கையில் உள்ள இன முரண்பாடு ஒரு தடையாக உள்ளது. இந்த இன முரண்பாட்டை எந்த வகையில் தீர்த்தல் என்பதே முக்கிய விடையம். இதற்கு இன்றைய உலகமயமாக்கலையும், உலக பொருளாதாரப் பங்கீடுகளையும், பிராந்திய வல்லாதிக்கங்களையும் முன்னிறுத்தியே, அதற்கான தீர்வை முன்வைக்க முடியும்.

இலங்கையில் ஒடுக்கப்படும் - சுரண்டப்படும் அனைவரையும் மையமாகக் கொண்ட, புரட்சியால் மாத்திரமே வர்க்கப் போராட்டத்தை நடத்த முடியும்.

இதற்கு இன்றைய உலக சூழலில், மார்க்சிச - லெனினிய - மாவோயிச சிந்தனையை, ஏற்றுக் கொள்பவர்களே உண்மையான மார்க்சியவாதிகள். மார்க்சியத்தையும் - லெனினியத்தையும் - மாவோயிசத்தையும் வாய்ப்பேச்சில் உச்சரித்தபடி, செயலளவில் அதற்கு மாறாக இயங்கிவரும் சக்திகளை, திரிபு வாதிகளாகவே கருதவேண்டும்.???

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

வர்க்கம் - அரசியல் - சாதியம் - பெண்ணியம்
தேசியம் - நிறம் - இனம் - மதம் - பண்பாடு - கலாச்சாரம்
இசை - சுற்றுச்சூழல் - நாடு - உலகம்
அனைத்து விடையங்களையும் நீங்கள் காண்பதற்கு:

அரசியலுக்கான கற்கைகளிற்கு : www.ndpfront.com - www.tamilcircle.net
ஆவணச் சுவடிகளை தேடுவதற்கு / இணைப்பதற்கு: www.tamilarangam.net
வேறு மொழிகளுடாக எமது அரசியலை அறிவதற்கு : www.ndpfront.net
மக்களுக்கு மறைக்கப்பட்ட செய்திகளை தேடுவதற்கு : www.kalaiy.blogspot.com

**சிறப்புறக் கற்போம்..!**
**கற்றுக் கொண்டே போராடி முன்னேறுவோம்..!!**

**www.ndpfront.com**